# 46

# யாரைக் குற்றம் சாட்டுவது?
## (9:30-10:13)

மக்கள் தங்கள் தோல்விகளுக்கு மற்றவர்களைக் குற்றம்சாட்ட முனை கின்றனர். ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனபோது, ஆதாம் தனது மனைவியையும் ஏவாள் பாம்பையும் குற்றம் சாட்டினர் (ஆதியா கமம் 3:12, 13). "பொறுப்பு" என்பது "ஒருவர் தமது அயலாருடைய ... தோள்கள்மீது சுலபமாக மாற்றிவைக்கும் பிரித்தெடுக்கக் கூடிய சுமை" என்று விளக்கப்பட்டுள்ளது.[1] பலர் சரியானதைத் செய்யத் தவறுகிறபோது, அவர்கள் தங்களைத் தவர மற்ற ஒவ்வொருவரையும் மற்றும் ஒவ்வொரு விஷயத்தையும் குற்றம்சாட்ட விரும்புகின்றனர். "அது எனது பெற்றோரின் தவறு." "அது எனது துணையின் தவறு." "சமூகம்தான் குற்றம்சாட்டப்பட வேண்டியதாக உள்ளது." "மற்ற பிள்ளைகளுக்கு இருந்த அனுகூலங்களை நான் ஒருக்காலும் கொண்டிருந்ததில்லை." "அது நான் சுகவீனமாக இருந்ததால் அவ்வாறு ஆயிற்று."

குற்றச்சாட்டைப் பிறர்மீது சுமத்துதல்பற்றி நான் நினைக்கையில், (எனது பெற்றோரின் வீட்டருகில் வாழ்ந்துகொண்டிருந்த) இரண்டு இளம் பையன்கள் ஒருவர் மற்றவரைச் சுட்டிக்காண்பித்துக்கொண்டு, பின்வரு மாறு கத்திக்கொண்டிருந்த நிகழ்ச்சியை நான் எனது சிந்தையில் காண்கிறேன்: "அவனே அதை செய்தான்"; "இல்லை, *அவன்தான்* செய்தான்." ஒரு தாய் தனது மகனுக்கு, "பூனையின் வாலைப் பிடித்து இழுப்பதை நிறுத்து" என்று புத்தி கூற, அவன் "நான் பூனையின் வாலைப் பிடித்து இழுக்கவில்லை. நான் அதைப் பிடித்துக்கொண்டு மாத்திரமே இருக்கிறேன்; அதுதான் இழுக்கும் வேலையைச் செய்துகொண்டுள்ளது" என்று பதில் அளித்த நிகழ்ச்சி பற்றி நான் வாசித்திருக் கிறேன்.[2]

புறஜாதிகள் சிலரைத் தேவன் ஏற்றுக்கொண்டிருக்கையில், அவர் யூதர்களில் பெரும்பான்மையானவர்களைப் புறக்கணித்ததற்கு யாரைக்குற்றம் சாட்டுவது என்ற கேள்வியை, இந்தப் பாடத்திற்கான வேதவசன பாடப்பகுதி எடுத்துரைக்கிறது. தேவன் நடுநிலையானவராக இருக்கிறார் என்று 9:14-29 வசனங்களில் பவுல் நிலைநாட்டினார். அது உண்மையாக இருப்பதால், யூதத்துவ இக்கட்டிற்குக் கர்த்தர் பொறுப்பாளியாக இருக்கவில்லை. பின்பு யாரைக் குற்றம் சாட்டுவது? யூதர்கள் ஒப்புகொள்ள மறுப்பார்கள் என்றபோதிலும், அவர்கள் தங்களைத் தவிர குற்றம்சாட்ட வேறொருவரையும் கொண்டிருக்கவில்லை.

9:30ல் பவுல் தமது கவனத்தை, தேவனுடைய இராஜரீகத்திலிருந்து மனிதரு டைய பொறுப்பிற்கு மாற்றினார். ஒன்றுக்கொன்று நேரெதிராக இருப்பதாகத் தோன்றும் இந்த இரு உபதேசங்களைப் பற்றி, R. B. குய்ப்பெர் என்பவர் பின்வரு மாறு கூறினார்:

*இவற்றை நான் கூரையின்மீதுள்ள இரு துளைகள் மற்றும் அவற்றிற்கு மேலாகவுள்ள சகடை உருளை ஆகியவற்றில் செல்லும் இரு கயிறுகளுக்கு ஒப்பிடுவேன். அவற்றினால் நான் தாங்கப்பட வேண்டும் என்று விரும்பினால், நான் அவை இரண்டையும் பிடித்துத் தொங்க வேண்டும். நான் ஒன்றை மாத்திரம் பற்றிக்கொண்டு இன்னொன்றை விட்டுவிட்டால், நான் கீழ்நோக்கிச் செல்லுவேன்.*

*... குழந்தையினது போன்ற நம்பிக்கையுடன் நான் இரு கயிறுகளையும் பிடித்துக்கொள்கிறேன். நித்தியத்தில் முழுமனநிறைவுடன் நான், சத்தியத்தின் அந்த இரு புரிகளும் ஒரே ஒரு துண்டுதான் என்று காண்பேன்.*[3]

மற்ற பாடங்களில் குறிப்பிட்டதுபோல, பவுல் இவ்விரு போதனைகளையும் ஒப்புரவாக்க முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை, ஆனால் அவர் இவை இரண்டையும் நம்பினார். 9:30-10:21ல், மனித பொறுப்பின்மீதே அவரது வலியுறுத்தம் இருந்தது. அவர் பெரும்பான்மையான யூதர்கள் தேவனால் புறக்கணிக்கப்பட்டது *ஏன்* என்று கலந்துரையாடினார்.

## யூதர்கள் புறக்கணித்திருந்த பாதை (9:30-33)

**உண்மைநிலை (வசனங்கள் 30, 31)**

பவுல், "இப்படியிருக்க நாம் என்னசொல்லுவோம்?" (வசனம் 30அ) என்று தொடங்கினார். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர் "யூதத்துவப் புறக்கணிப்பு பற்றி நாம் இன்னும் அதிகமாய் என்ன சொல்லுவோம்?" என்று கேட்டுக் கொண்டிருந்தார். பவுல் கூற இருந்தது என்ன? புறஜாதியார் இயேசுவில் விசுவாசம் கொண்டதால் அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தனர் என்பதே அவரது வலியுறுத்தமாக இருந்தது. அவர், "நீதியைத் தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள்; அது விசுவாசத்தினாலாகும் நீதியே" என்று கூறினார் (வசனம் 30ஆ).

30 மற்றும் 31 ஆகிய வசனங்களில், "நீதி" என்பது தேவனால் சரியானவராக எண்ணப்பட்டிருத்தலை குறிக்கிறது. இது "*விசுவாசத்தினால் உண்டாகிற* நீதியாக இருக்கிறது" - இது விசுவாசத்தின் அடிப்படையில் தேவனிடத்தில் சரியாக நிற்குதலாக உள்ளது. இவ்விடத்தில் பவுல் தமது நிருபத்தின் பிரதான ஆய்வுக்கருத்தைத் திரும்பவும் உரைத்தார். தேவன் நமது கிரியைகளினிமித்தம் அல்ல, ஆனால் நமது விசுவாசத்தினிமித்தமாகவே நம்மைச் சரியானவர்களாக எண்ணுகிறார். 9:1-29ல், பவுல் தேவன் தாம் விரும்புகிற யாரையும் தேர்ந்து கொள்ளும் *உரிமை கொண்டுள்ளார்* என்பதை நிலைநாட்டினார். இப்போது அவர் தமது வாசகர்களுக்கு, *விசுவாசிகளை* - இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்களை - ஏற்றுக்கொள்ளுதல் என்பதே தேவன் ஏற்படுத்திய தேர்ந்து கொள்ளுதலாக உள்ளது என்பதை நினைவூட்டினார்.

புறஜாதியார் தேவனுடைய நீதியை "தேடவில்லை." "தேட" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள (*dioko*) என்ற கிரேக்க வார்த்தை "ஊக்கமாய் நாடுதல்" என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது.[4] புறஜாதியார் தேவனுடன் சரியாக நிற்குதலுக்கு "ஊக்கமாய் நாடவில்லை" என்று கூறுதலானது ஒரு மட்டமான கூற்றாயிருக்கிறது. விதிவிலக்குகள் இருந்தாலும், புறஜாதியார் முழுமையும் ஒழுக்கவீன

*மானவர்களாக, சுய மையங்கொண்ட விக்கிரகாராதனைக்காரர்களாக இருந்தனர் (காண்க 1:18-32). ஆவிக்குரிய விஷயங்களில் குறைவான ஆர்வத்துடனிருந்த புறஜாதியார் தேவனுடன் சரியாக நிற்குதலை எவ்வாறு அடைய முடிந்தது? சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டபோது அந்தப் புறஜாதியார் தங்கள் பாவங்கள் உணர்த்தப்பட்டவர்களாகவும் விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலில் கர்த்தரிடத்தில் திரும்பியவர்களாகவும் இருந்தனர்.*

*அந்தப் புறஜாதியாருக்கு நேர்மாறான வகையில், "நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை" (9:31). இவ்வசனத்தில் பவுல் எந்த "பிரமாணத்தை" தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்பதற்கு கருத்து ஒருமைப்பாடு எதுவும் இருப்பதில்லை. சிலர் அவர் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிட்டார் என்று நினைக்கின்றனர்; சிலர், பொதுவில் பிரமாணத்தைக் குறிப்பிட்டார் என்றும், மற்றவர்கள் ஒரு அடிப்படைக் கொள்கையைக் குறிப்பிட்டார் என்றும் நினைக்கின்றனர்.*[5]

*இப்போதைக்கு நாம், "பிரமாணத்தின்" என்ற சொற்றொடர் பற்றிக் கவலைப் படாது, புறஜாதியார் போலின்றி யூதர்கள் நீதியை அடைய செயல்முனைப்புடன் உழைத்தனர் என்ற உண்மையின்மீது கவனம் குவிப்போமாக. அவர்கள் தங்கள் சடங்குகளை நிகழ்த்தினர். அவர்கள் தங்கள் சடங்காச்சாரங்களைச் செயல்படுத்தினர். அவர்கள் தங்கள் மார்க்கப் பாரம்பரியம் பற்றித் தீவிரமா யிருந்தனர். அவர்கள் ஒய்வு நாளையும் பண்டிகை நாட்களையும் ஆசரித்தனர். அவர்கள் எருசலேமிலிருந்த தேவாலயத்திற்குச்செல்ல நியமிக்கப்பட்ட பயணங் களை மேற்கொண்டனர். இருந்தபோதிலும், அவர்கள் தாங்கள் விரும்பிய அடை விடத்தை "சென்றடையாதிருந்தனர்."*

### *காரணம் (வசனம் 32அ)*

*"என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடைய வில்லை" (வசனம் 32அ). இப்போது நாம் "நியாயப்பிரமாணம்" என்ற வார்த்தைக்குத் தயாராக இருக்கிறோம். யூதர்கள், நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதினால், குறிப்பிட்ட சில கிரியைகளைச் செய்வதினால் நீதியை அடைய இயலும் என்று நினைத்தனர். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபோது, அவர்கள் இரட்சிப்பு தேவைப்பட்ட பாவிகளாக இருந்தனர் என்ற மறைமுக மான கூற்றினால் அவமானம் அடைந்தனர். அவர்கள் இயேசுவைப் புறக்கணித்து, அவரது சிலுவை மரணத்தினால் சங்கடமுற்றனர். அவர்கள் நீதியைத் தேடினர், ஆனால் அதை அவர்கள் தவறான திசையில் தேடினர். எனவே அதை அவர்கள் கண்டடையத் தவறியதில் வியப்பு எதுவும் இல்லை. உங்களுக்கு விருப்பமான அடைவிடம் கிழக்கிலிருக்க, நீங்கள் மேற்கு நோக்கி பயணம் செய்தால், நீங்கள் பயணம் செய்யும் ஒவ்வொரு மைலும், உங்களுக்கு விருப்பமான அடைவிடத்தை நெருங்கியல்ல, ஆனால் அதிலிருந்து தொலைவிலேயே உங்களை எடுத்துச் செல்லும்.*

### *விளைவு (வசனங்கள் 32ஆ, 33)*

*யூதர்கள் தங்களுக்காகத் தேவன் இட்டிருந்த பாதையில் தொடர்ந் திருந்தால், அவர்கள் இயேசுவை மேசியா என்று ஒப்புக்கொண்டிருப்பார்கள்.*

அதை அவர்கள் செய்யாதபடியால், "இடறுதற்கான கல்லில் இடறினார்கள்" (வசனம் 32ஆ; காண்க ஏசாயா 8:13-15). "இடறினார்கள்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள *proskopto* என்ற வார்த்தை "எதிராகத்தாக்குதல்" மற்றும் "இடறி விழுதலுக்கு ஏதுவாகுதல்" என்று அர்த்தப்படுகிறது.[6]

இயேசு "இடறுதற்கான கல்லாக" இருந்தார் (காண்க 1 பேதுரு 2:8[7]). சங்கீதக்காரர் "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று" என்று எழுதியிருந்தார் (சங்கீதம் 118:22). புதிய ஏற்பாட்டுப் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் இவ்வசனப்பகுதியை இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தினர் (காண்க மாற்கு 12:10; நடபடிகள் 4:11).

கட்டுவோர் புறக்கணித்த கல்லானது இடறுதற்கேதுவான கல்லாயிற்று என்பதை நான் வாசிக்கையில், கட்டிடம் ஒன்றைக் கட்டும் பணியாளர்கள் பற்றிய ஒப்புவமையே என் மனதிற்கு வருகிறது. கட்டிட வரைபடம் வரைபவரின் மாதிரிப் படத்தைக் காணாது விட்டுவிட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று *அவர்கள்* நினைக்கிற வகையில் கட்டிடத்தைக் கட்டியெழுப்புகின்றனர் (என்று வைத்துக்கொள்வோம்). இதன் விளைவாக, மூலைக்கல்லானது கட்டுமிடத்திற்கு கொண்டுவரப்படுகிறபோது, அது ஒதுக்கப்பட்டு பணி இடத்தில் கைவிடப்பட்டு உள்ளது. பணியாளர்கள் முன்னும் பின்னுமாக அவசரமாய் நடந்து பணி செய்கையில், தாங்கள் வடிவமைத்த திட்டத்திற்கு பொருத்தமான கற்களைக் கொண்டுவருகையில், புறக்கணிக்கப்பட்ட அந்த மூலைக்கல்லின்மீது அவர்கள் இடறி விழுகின்றனர். ஆகவே, அந்தக் கல்லானது, கட்டிடத்திற்கு முக்கியமான ஆதாரமாக இருப்பதற்குப் பதிலாக, ஒரு தொந்தரவாகவும் எரிச்சலின் ஆதார மூலமாகவும் இருப்பதாகக் கருதப்படுகிறது.

இயேசு வந்தபோது, அவர் மேசியாவைப் பற்றி யூதர்களால் முன் அனுமானம் செய்யப்பட்ட கருத்துக்களுக்குப் "பொருந்தவில்லை." அவர் இராஜரீக உடைகளைத் தரிக்கவில்லை. அவர் பூமிக்குரிய அரசர் என்று முடிசூடப்படுதலை மறுத்தார் (யோவான் 6:15). அவர் பலஸ்தீனத்திலிருந்து ரோமர்களைத் துரத்த வல்லமையுள்ள சேனையை அணிவகுக்கச் செய்யவில்லை (காண்க யோவான் 18:36). யூதர்கள் மேசியாவுக்கென்று செதுக்கி வைத்திருந்த மாடத்திற்கு இயேசு பொருத்தமற்றவராக இருந்ததால், அவர்கள் அவரைப் புறக்கணித்தனர். இதன் விளைவாக, இயேசு அவர்களுக்குப் பிரதானமான எரிச்சல் மூட்டுபவராக, அவரைக் கொலைசெய்தல் மூலம் அவரை அகற்ற அவர்கள் முயற்சிசெய்த ஒரு தொந்தரவுசெய்பவராக ஆனார்.

ஒருவேளை யூதர்கள், இயேசு *உண்மையிலேயே* மேசியாவாக இருந்தாரென்றால், இஸ்ரவேல் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பாரே என்பதால் அவரை மறுத்திருக்கலாம். அவர் புறக்கணிக்கப்பட்டது அவர் மேசியா அல்ல என்பதை நிருபித்தது என்றுகூட அவர்கள் முடிவுசெய்திருக்கலாம். இருப்பினும், தீர்க்கதரிசிகள் மேசியா இஸ்ரவேல் மக்களால் புறக்கணிக்கப்படுவார் என்று முன்னுரைத்திருந்தனர். பவுல் ஏசாயாவின் புத்தகத்திலிருந்து மேற்கோள் காண்பித்து, அதில் 28:16ஐ 8:14 உடன் ஒன்றிணைத்தார். ரோமர் 9:33, "இதோ, இடறுதற்கான கல்லையும் [ஏசாயா 28:16ஆ], தவறுதற்கான கன்மலையையும் [ஏசாயா 8:14ஆ], சீயோனில் [எருசலேமில்] வைக்கிறேன் ... என்று எழுதியிருக்கிறபடியாயிற்று" என்று தொடங்குகிறது. "தவறுதல்" என்பது *skandalon* என்ற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இதிலிருந்தே நாம்

"scandal" மற்றும் "scandalous" என்ற வார்த்தைகளைப் பெறுகிறோம்.

> *Skandalon* என்பது மூலத்தில், இரை இணைக்கப்பட்ட பொறியின் பாகத்தினுடைய பெயராக [இருந்தது] ... [புதிய ஏற்பாட்டில்] *Skandalon* என்பது எப்போதுமே உருவகநடையில் பயன்படுத்தப்பட்டுள்ளது, மற்றும் இது தப்பெண்ணத்தைத் தூண்டுகிற எந்த விஷயத்தையும் அல்லது மற்றவர்களுக்கு இடையூறாகக் கூடிய அல்லது அவர்கள் விழுவதற்குக் காரணமாகக் கூடிய எந்த விஷயத்தையும் சாதாரணமாகக் குறிப்பதாக உள்ளது. ...[8]

NCV வேதாகமத்தில் "a rock that makes them fall" என்றுள்ளது.

யூதர்களுக்கு, இயேசு ஒரு பொதுவான குற்றவாளியைப்போல் சிலுவையில் அறையப்பட்டிருந்தார் என்பது மிகவும் தவறுதற்கு ஏதுவான விஷயமாக இருந்தது. கொரிந்தியர்களுக்குப் பவுல், "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் ... இருக்கிறார்" (1 கொரிந்தியர் 1:23) என்று கூறினார். கலாத்தியர் 5:11ல் அவர் "சிலுவையைப் பற்றி வரும் இடறல்" பற்றிக் குறிப்பிட்டார். யூதர்களைப் பொறுத்தமட்டில், சிலுவையில் மரித்தல் என்பது அரசராக இருப்பவருக்குச் செய்விக்கப்படத் தகாத ஒரு செயலாக இருந்தது!

இஸ்ரவேல் மக்களில் பெரும்பான்மையானவர்கள் இயேசுவைப் புறக்கணிப்பார்கள் என்பதைத் தேவன் அறிந்திருந்தார், ஆனால் ஒருசிலர் அவரை ஏற்றுக்கொள்வார்கள் என்பதையும் அவர் முன்னெதிர் நோக்கினார். இந்தக் காரணத்தினால் ஏசாயா தமது தீர்க்கதரிசனத்தில், "அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை" என்பதையும் கூடுதலாகக் கூறினார் (ரோமர் 9:33ஆ; காண்க ஏசாயா 28:16ஆ). "வெட்கப்படுவதில்லை" என்பது *kataischuno* என்ற கூட்டு வார்த்தையிலிருந்து வருகிறது, இது "வெட்கப்பட்டிருத்தல்" (*aischuno*) என்பதற்கான வார்த்தையை *kata* என்ற முன்னிடைச்சொல்லைக் கொண்டு வலுப்படுத்துவதாக இருக்கிறது.[9] இது நியாயத்தீர்ப்பின் நாளில், கர்த்தரால் புறக்கணிக்கப்பட்ட ஒருவர் வெட்கத்திற்கு ஆளாகுதல் என்பதைக் குறிப்பதாக உள்ளது. இயேசு, "... என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுகூட வரும்போது வெட்கப்படுவார்" (மாற்கு 8:38) என்று கூறினார். இருப்பினும் - யூதராயினும் புறஜாதியாராயினும் - இயேசுவில் விசுவாசம் கொள்கிறவர் இந்த வெட்கக் கேட்டிற்கு ஆளாக மாட்டார். இத்துடன் பவுல் நம்பிக்கை பற்றிய குறிப்பின் மீதான தமது சிந்தனை வரியை முடித்தார்.

## யூதர்கள் பயணித்திருந்த பாதை (10:1-8அ)

யூதர்கள் சரியான பாதை வழியைப் புறக்கணித்திருந்தபடியால், தாங்கள் தேவனால் புறக்கணிக்கப்பட்டிருந்தமைக்கு, அவர்கள் தங்களைத் தாங்களே குற்றம்சாட்டிக் கொள்வதைத்தவிர வேறெவரையும் குற்றம்சாட்டக் கூடாதிருந்தனர் (9:31, 32), மற்றும் தவறான பாதை வழியில் சென்று கொண்டிருப்பதில் பிடிவாதமாய் இருந்தனர் (வசனம் 32அ). 10ம் அதிகாரத்தின் முதற்பகுதியில்

*பவுல் மக்கள் செல்லக் கூடிய இரண்டு பாதைகளை நேரெதிராக ஒப்பிட்டார். அவ்வாறு செய்ததில் அவர் யூதர்கள் தவறான பாதையை மேற்கொண்டிருந்தனர் என்ற சிந்தனையை அடிக்கோடிட்டார்.*

**பவுலின் மன எழுச்சி (வசனம் 1)**

*10:1ல் பவுல் தமது சகநாட்டவர்கள் மீதான தமது அன்பையும் அக்கறையையும் மீண்டும் உறுதிப்படுத்தினார் (இதை 9:1-3 உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்). அவர், "சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது" என்று கூறினார். இவ்வசனத்தில், "சகோதரரே" என்பது கிறிஸ்தவர்களையும் "அவர்கள்" [இது தமிழ் வேதாகமத்தில் "இஸ்ரவேலர்" என்றே உள்ளது] என்பது யூதர்களையும் குறிப்பதாக உள்ளது* (NIV *வேதாகமத்தில் காணவும்). பவுல் யூதர்களின் இழந்துபோகப்பட்ட நிலையைப்பற்றி அக்கறையுள்ளவராக - ஆழ்ந்த அக்கறையுள்ளவராக - இருந்தார். "அவர்களின் இரட்சிப்புக்காக" அவர் ஜெபித்தார்: அவர்கள் இயேசுவைப் பற்றிய சத்தியத்தை ஏற்றுக்கொள்பவர்களாக வேண்டும் என்பதற்கு அவர் ஜெபித்தார். பிலிப்ஸ் வேதாகமத்தில்,* "From the bottom of my heart I long and pray to God that Israel may be saved!" *என்றுள்ளது. நம்மைச் சுற்றிலும் இழந்துபோகப்பட்டவர்களாக வாழ்பவர்கள் மீது நீங்களும் நானும் அவ்வகையான அக்கறை கொண்டிருக்கிறோமா? அவர்களுக்காக நாம் ஜெபிக்கிறோமா?*

**யூதர்களின் பிரச்சனை (வசனங்கள் 2-4)**

*தொடர்ந்து பவுல், "தேவனைப்பற்றி அவர்களுக்கு [யூதர்களுக்கு] வைராக்கியமுண்டென்று அவர்களைக்குறித்துச் சாட்சிசொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல" என்று கூறினார் (வசனம் 2). "சாட்சி சொல்லுகிறேன்" என்பது, "முதல்நிலை அறிதலின் அடிப்படையில்"[10] "சாட்சியம் அளித்தல்"[11] என்று அர்த்தப்படுகிற martureo என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. பவுல் தமது சொந்த வாழ்வில் முதல் நிலை அறிவு கொண்டிருந்தபடியால் இந்த விஷயத்தைக் குறித்து அவரால் சாட்சியளிக்க முடிந்தது. எருசலேம் சங்கத்தார் முன்னிலையில் அவர், "நான் யூதன், சிலிசியாநாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையத்தினம் நீங்களெல்லாரும் தேவனைக்குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறது* போல *நானும்* வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்*" என்று கூறினார் (நடபடிகள் 22:3 [என்னால் வலியுறுத்தப்படுகிறது]; காண்க கலாத்தியர் 1:13, 14; பிலிப்பியர் 3:6).*

*"வைராக்கியம்" என்பது "கொதிக்க, வெப்பமாயிருக்க" என்பதற்கான (zeo என்ற) வார்த்தையிலிருந்து வருகிற zelos என்ற கிரேக்க வார்த்தையின் ஒலி பெயர்ப்பாக உள்ளது.[12] நாம் தேவனுக்காக "அனலாய்" இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். லவோதிக்கேயாவிலிருந்த சபைக்கு இயேசு, "இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி [zestos] வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்" என்று கூறினார்*

*(வெளிப்படுத்தின விசேஷம் 3:16). கிறிஸ்து தேவாலயத்திலிருந்து காசுக்காரர்களைத் துரத்தியபோது, தேவனுடைய வீட்டைக் குறித்து உண்டான பக்தி வைராக்கியம் அவரைப் "பட்சித்தது" என்று கூறப்பட்டது (காண்க யோவான் 2:17).*

*இருப்பினும், வைராக்கியம் கட்டுப்படுத்தப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. கட்டுப்படுத்தப்படாத வைராக்கியத்தைக் குறித்து நான் நினைக்கையில், அழிக்கக்கூடிய ஒரு கட்டுப்படுத்தப்படாத நெருப்பு எப்படி இருக்கக்கூடும் என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். நான் முதலாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது, சில நெருப்புக்குச்சிகளைக் களவாய் வெளியே எடுத்துக்கொண்டுபோய், எங்களது வீட்டிற்கருகிலுள்ள புல்வெளியில் நெருப்புப் பற்றவைத்தேன். எனது தந்தையும் அருகிலிருந்த விவசாயிகளும், அந்த நெருப்புச் சுவாலைகள் எங்கள் வீட்டையும் அப்பகுதியிலிருந்த மற்ற உடைமைகளையும் பட்சித்துப் போடுவதிலிருந்து காப்பாற்றப் போராடுகையில் நான் எவ்வளவாகக் கவலைப்பட்டேன் என்பதை நினைத்துப் பார்க்கிறேன்.*

*வைராக்கியம் என்பது கட்டுப்படுத்தப்பட்டு அறிவினால் இயக்கப்பட வேண்டும். ஞானவானான மனிதர், "ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல" என்று கூறினார் (நீதிமொழிகள் 19:2அ;* NLT). *Epignosis என்பது ரோமர் 10:2ல் "அறிவு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையாகும்: இதில், "அறிவு" என்பதற்கான (gnosis என்ற) வார்த்தை epi என்ற முன்னிடைச் சொல்லினால் பெலப்படுத்தப்பட்டள்ளது. Epignosis என்பது " 'மிகச்சரியான அல்லது முழுமையான அறிவு' என்பதைக் குறிக்கிறது."*[13] *யூதர்கள் வைராக்கியத்தில் முழுமையாய் இருந்தனர், ஆனால் அறிவில் குறைவுபட்டிருந்தனர். அவர்கள் "தவறான தகவல் பெற்ற வைராக்கியம்"* (NEB), *"தவறாக வழிநடத்தப்பட்ட" வைராக்கியம்* (JB), *"தவறாக இயக்கப்பட்ட வைராக்கியம்"* (LB) *உடையவர்களாக இருந்தனர்.*

*இன்றைய நாட்களில் பலர் தேவனைப் பிரியப்படுத்துவதற்கு பக்தி வைராக்கியம் மாத்திரமே ஒருவருக்குத் தேவை என்று நம்புகின்றனர். பிரபலமான நம்பிக்கையொன்று பின்வருவது போன்று விளக்கப்படுத்தப்படக்கூடும்: "ஒருவர் நேர்மையாகவும் உண்மையாகவும் இருந்தால் அவர் பரலோகம் செல்வார்." இது உண்மையல்ல என்று ரோமர் 10:2 அறிவிக்கிறது. "நேர்மையாயிருத்தல் மாத்திரம் போதுமானதல்ல, ஏனெனில் நாம் தவறாகப் புரிந்துகொள்வதில் நேர்மையாயிருக்கக்கூடும்."*[14]

*அறிவு இல்லாத நிலையில் வைராக்கியமாயிருத்தல் என்ற ஆபத்து நிறைந்த நிலையானது பலவழிகளில் விவரிக்கப்படக்கூடும். சில எழுத்தாளர்கள் அறிவை வெளிச்சத்திற்குச் சமமாக்குகின்றனர் (காண்க சங்கீதம் 119:105). அவர்கள் அறிவற்ற நிலையில் வைராக்கியம் கொண்டுள்ள ஒரு மனிதர் எங்கு செல்கிறோம் என்ற கருத்தின்றி இருளினூடே தன்னால் முடிந்த அளவுக்கு வேகமாக ஓடும் மனிதரைப்போல் இருக்கிறார் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இதே போன்ற விவரிப்பாக என் மனதிற்கு வருவது, வைராக்கியம் என்பதை என்ஜினாகவும் அறிவு என்பதைத் திருப்பும் கருவியாகவும் கொண்ட மோட்டார் வாகனமாகும். பழைய கார் ஒன்றிலிருந்த மனிதர்கள் சமதளத்தின் குறுக்கே கட்டுப்படுத்த முடியாமல் படுவேகமாய் சென்றுகொண்டிருந்த கதை ஒன்றும் உள்ளது. ஒரு மனிதர் அந்தக் காரோட்டியிடத்தில், "நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்?" என்று கேட்டார். அதற்கு அந்தக் காரோட்டி, "எனக்குத் தெரியாது, ஆனால்*

*நாம் மாபெரும் நேரம் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம்!" என்று பதில் அளித்தார்.*

*யூதர்கள் அறிவற்ற வைராக்கியம் கொண்டிருந்ததால் இடர்பாட்டில் இருந்தனர். நீங்களும் நானும், வைராக்கியமற்ற அறிவு கொண்டிருத்தலும் இதைப் போன்றே மோசமானதாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாக உள்ளது. தேவனுடைய பார்வையில் இவ்விரண்டு நிலைகளுமே ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*யூதர்கள் தங்கள் அறிவுக்குறைவை மறுத்திருக்கலாம்; அவர்கள் வேதவசனத்திலிருந்து கணிசமான அளவுக்கு மேற்கோள் காண்பித்திருக்கக்கூடும். ரோமர் 10:2ல் "அறிவு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது "முழுமையான அறிவு" என்று அர்த்தப்படுகிறது என்பதை நினைவில் வையுங்கள். யூதர்கள் சில விஷயங்களை அறிந்திருந்தனர், ஆனால் மிகமுக்கியமான விஷயத்தை அவர்கள் அறியாதிருந்தனர். 3ம் வசனம், "எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல்" என்று தொடங்குகிறது. "தேவநீதி" என்பது இங்கே தேவனுடைய பண்பைக் குறிப்பிடவில்லை; ஆனால் மனிதரை அவர் நீதியானவர்கள் என்று எண்ணும் அவருடைய ஒழுங்குமுறையைக் குறிப்பிடுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இது கிருபை/விசுவாசம் முறைமையைக் குறிக்கிறது. யூதர்கள் மனப்பூர்வமாய் இதைப்பற்றி அறியாதிருந்தனர். ஏனென்றால் இது அவர்கள் கண்டுபிடித்திருந்த நியாயப்பிரமாணம்/கிரியைகள் என்ற முறைமைக்கு நேர்விரோதமாக இருந்தது.*

*பவுல், "எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், [சரியாக இருப்பதாக எண்ணப்படும் முறைமையான] தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்" என்று கூறினார் (வசனம் 3அ, ஆ). அப்போஸ்தலர் மீண்டும் சொந்த அனுபவத்திலிருந்து பேசினார். பிலிப்பியர் 3ல், அவர் கிறிஸ்துவைப் பின்பற்ற எவற்றை விட்டுக்கொடுத்தார் என்று பட்டியலிடுகையில், அவர் "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும்,* நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், *கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்" இருக்கத் தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார் (வசனம் 9; என்னால் வலியுறுத்தப்படுகிறது).*

*யூதர்களைப் பற்றிப் பவுல் கூறிய விஷயத்தை பொதுவாக மனிதகுலம் பற்றியும் கூறமுடியும்: தேவனுடைய வழியில் திருப்தியடையாமல், மக்கள் பரலோகம் செல்வதற்குத் தங்கள் சொந்தமுறைமைகளை நிலைநாட்ட முயற்சி செய்கின்றனர்.[15] "நான் இதை என் வழியில் செய்தேன்" என்பது பலருக்கு விருப்பமான "கீர்த்தனையாக" உள்ளது.[16] நாம் விஷயங்களை, நமது சொந்த வழியில் அல்ல, ஆனால் தேவனுடைய வழியில் செய்வது என்று தீர்மானிக்கத் தேவன் நமக்கு உதவுவாராக!*

*யூதர்கள் நீதிமான்களாக எண்ணப்படுவதற்கு, நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுதலைச் சார்ந்திருந்தனர். பவுல் இதன் சாத்தியமற்ற தன்மையை அடுத்த இரண்டு வசனங்களில் விவரித்தார். 4ம் வசனம் "விசுவாசிக்கிற எவனுக்கும்*

நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்" என்று கூறுகிறது. "முடிவு" என்பது சாத்தியக்கூறான பல அர்த்தங்கள் கொண்ட *telos* என்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது NASB வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி "முடிவு [இறுதிநிலை]" என்று அர்த்தப்படக்கூடும்; ஆனால் இது எனது NASB வேதாகமப் பிரதியினுடைய மையக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபடி "இலக்கு" என்றும் அர்த்தப்படக் கூடும். பெரும்பான்மையான மொழிபெயர்ப்புகள் "முடிவு" அல்லது அதற்குச் சமமான வார்த்தையைக்கொண்டுள்ளன (NASB; NIV; RSV; NEB; JB; NCV; TEV), ஆனால் ஒரு சிலவற்றில் "இலக்கு" அல்லது அதற்குச் சமமான வார்த்தை (CJB; McCord) உள்ளது.

இவ்விரு விளக்கங்களுமே மோசேயின் நியாயப்பிரமாணத்துடன் உண்மை யாகவே உள்ளது. உண்மையில் இவ்விரண்டும் ஒன்றின்மேல் ஒன்று கவிகிறதா யுள்ளது.[17] கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தின் "இலக்காக" இருக்கிறார் என்ற வகையில் பவுல் கலாத்தியர் 3ல் "இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது" என்று எழுதினார் (வசனம் 24). பின்பு அவர், "விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர் களல்லவே" என்றும் கூடுதலாக எழுதினார் (வசனம் 25). தேவனுடைய மக்களுக்கு அவரது நடைமுறையிலுள்ள வெளிப்படுத்துதல் என்ற வகையில் நியாயப்பிரமாணம் "முடிவாகுதல்" என்பது கிறிஸ்துவின் வருகையின் விளைவுகளில் ஒன்றாக உள்ளது.[18] இவ்விரு விளக்கங்களில் எந்த ஒன்றும், யூதர்கள் நியாயப்பிரமா ணத்தைக் கைக்கொள்ள முயற்சிப்பதை விட்டுவிட்டு, "நியாயப்பிரமாணத்தின் முடிவாக இருந்த" இயேசுவினிடத்தில் திரும்ப வேண்டும் என்று அறிவிக்கிறது.

ரோமர் 10:4ஐ நாம் விட்டுச் செல்வதற்கு முன்பு, பவுல் அனேகமாக, மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பற்றி மாத்திரம் இங்கு கூற்றை ஏற்படுத்தவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவர் "யூதத்துவப் பிரச்சனை" பற்றிக் குறிப்பிட்டுக் கொண்டிருந்தபடியால், நிச்சயமாகவே அவர் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தைத் தமது சிந்தையில் கொண்டிருந் திருப்பார். இருப்பினும், கிரேக்க வேதவசனத்தின் 4ம் வசனத்தில் "நியாயப்பிர மாணம்" என்ற வார்த்தைக்கு முன்னால் திட்டவட்டச்சுட்டுச்சொல் இல்லாத காரணத்தினால் நாம் பொதுவான நடைமுறைப் பயன்பாட்டையும் ஏற்படுத்த முடியும். *Telos* என்ற வார்த்தையை "முடிவு" அல்லது "இறுதிநிலை" என்று அர்த்தப்படுத்தப் பயன்படுத்துவதில், நாம் இவ்வசனத்தைப் பின்வருவது போன்று வாசிக்கப்படும்படி விரிவாக்கலாம்: "[இயேசுவை] விசுவாசிக்கிற எவனுக்கும் [தேவனால் அருளப்படுகிற] நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து [அதை அடையக் கடைப்பிடிக்கும் வழிமுறை என்ற வகையில்] நியாயப்பிரமா ணத்தின் முடிவாயிருக்கிறார்."

### மோசேயின் அறிவிப்புகள் (வசனங்கள் 5-8அ)

கடந்து செல்லுகையில் பவுல் மீண்டுமாக 5ம் வசனத்தில், நியாயப்பிரமா ணத்தைக் கைக்கொள்ளுவதினால் நீதியை அடைய முயற்சி செய்வதில் உள்ள சாவுக்கேதுவான தவறைக் காண்பித்தார். அவர் "மோசே நியாயப்பிரமாணத்தி னாலாகும் நீதியைக்குறித்து: இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால்

*பிழைப்பான் என்று எழுதியிருக்கிறான்" என்று எழுதினார் (வசனம் 5). பவுல் லேவியராகமம் 18:5ல் இஸ்ரவேல் மக்களுக்குக் கர்த்தர், "ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்" என்று கூறியதைத் தமது சிந்தையில் கொண்டிருப்பார் என்பது தெளிவு. லேவியராகமம் 18:5ல் உள்ள "பிழைப்பான்"* ["may live"] *மற்றும் ரோமர் 10:5ல் உள்ள "பிழைப்பான்"* ["shall live"] *ஆகிய இரண்டும் "ஜீவனைக் கண்டடைவான்" என்று அர்த்தப்படுகின்றன.*[19] JB *வேதாகமத்தில்* "those who keep the Law will draw life from it" *என்றுள்ளது.*

*இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய சட்டங்களையும் நியாயத்தீர்ப்புகளையும் கைக்கொண்டால், அவர்கள் ஜீவனைக் கண்டடைவார்கள் என்று தேவன் இஸ்ரவேல் மக்களுக்குக் கூறினார். ஜீவனைக் கண்டடைதல் என்பது நல்ல தாகவே ஒலிக்கிறது - எனவே பிரச்சனை என்னவாக இருந்தது? நியாயப்பிரமா ணத்தைக் கைக்கொள்வதன்மூலம் ஜீவனை அடைவதற்கு அவர்கள் நியாயப்பிர மாணத்தைப் பூரணமாகக் கைக்கொள்ள வேண்டியதாயிருந்தது. (நியாயப்பிரமா ணத்தைக் கைக்கொள்ளத் தவறிய எவரொருவரும் சபிக்கப்பட்டார்* [*காண்க உபாகமம் 27:26; கலாத்தியர் 3:12, 13*].*)* CEV *வேதாகமம், ரோமர் 10:5ல் உள்ள மோசேயின் வார்த்தைகளைப் பின்வருவது போன்று மொழிபெயர்க்கிறது:* ["If you want to live, you must do *all* that the Law commands"] *"நீங்கள் ஜீவனடைய விரும்பினால் நியாயப்பிரமாணம் கட்டளையிடுகிற யாவற்றையும் செய்ய வேண்டும்" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). இருப்பினும், எவரொருவரும் எல்லாக்காலத்திலும் எல்லாக் கட்டளைகளையும் தவறின்றிக் கைக்கொள்ள இயலாதிருந்தது. இந்தக் காரணத்தினால், நியாயப்பிரமாணம்/கிரியைகள் முறைமையின் அடிப்படையில் நீதியைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது சாத்திய மற்றதாக இருந்தது.*

*அதற்கு நேர்மாறாக, தேவனுடைய கிருபை/விசுவாசம் என்ற முறை மையின் அடிப்படையில் நீதியை அடைதல் என்பது சாத்தியமானதாக இருந்தது. அதுவே அடுத்த சில வசனங்களின் செய்தியாக உள்ளது - இது முதல் நூற்றாண்டு யூத வாசகர்களுக்குப் பழக்கமான ஆனால் நமக்குப் பழக்கமற்ற சொல்விளக்கங்களைப் பயன்படுத்தும் செய்தியாக உள்ளது.*

*6ம் வசனம், "விசுவாசத்தி[கிருபை/விசுவாசம் என்ற முறைமையி]னாலாகும் நீதியா[தேவனுடன் சரியான வகையில் நிற்குதலா]னது" என்று தொடங்குகிறது. பவுல் அப்போதுதான் மோசேயைக் குறிப்பிட்டு நியாயப்பிரமாணம்/கிரியைகள் என்ற முறைமையைப் பற்றிப் பேசியிருந்தார் (வசனம் 5). இப்போது அவர் கிருபை/விசுவாசம் என்ற முறைமைக்கு நீதியைப் பேச்சாளராக நபர்த்துவப் படுத்தினார். "விசுவாசத்தினாலாகும் நீதி" என்பது கூறுவதற்கு எதைக் கொண் டிருக்கிறது? கவனியுங்கள்:*

> *விசுவாசத்தினாலாகும் நீதியானது: "(கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி) 'பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்?' அல்லது ('கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி) பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்?' என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி;" "இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்*

கிறது என்றும் சொல்லுகிறது" (வசனங்கள் 6-8அ).

பவுல் உபாகமம் 30ல் இருந்து வார்த்தையமைப்பைப் பயன்படுத்தினார், இது இஸ்ரவேல் மக்களுக்கு மோசேயின் பிரியாவிடை உரையின் பாகமாக உள்ளது:

> "நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல. நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, 'எங்கள்நிமித்தம் *வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று*' நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல; 'நாங்கள் அதைக் கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள்நிமித்தம் *சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார்?*' என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல; நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, *அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது*" (உபாகமம் 30:11-14; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

"சமுத்திரம்" என்பதற்குப் பதில் பவுல் "பாதாளம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதைக் கவனியுங்கள். "பாதாளம்" என்பது "அடியற்றது" என்று அர்த்தப்படுகிற *abussos* என்ற வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது.[20] கிரேக்கப் பழைய ஏற்பாட்டில், பாதாளம் ("ஆழங்கள்") என்பது அடிக்கடி தண்ணீர் அதிகமுள்ள இடங்களுடன் இணைவுபடுத்தப்பட்டது (காண்க சங்கீதம் 68:22). ரோமர் 10:7ல் KJV வேதாகமத்தில், "Who shall descend into the deep?" என்றுள்ளது (NIVயில் காணவும்). கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதல் பவுலின் நடைமுறைப் பயன்பாடாக இருந்தபடியால், அவர் அனேகமாக, மரித்தவர்கள் இருக்கும் இடத்தை (NLT) அல்லது கல்லறையை (McCord) தமது சிந்தையில் கொண்டிருக்கலாம். மிகவும் நுண்ணிய விளக்கம் முக்கியமற்றதாக உள்ளது. "பரலோகம்" என்ற வார்த்தையைப் பவுல், ஒருவர் செல்லக்கூடிய உயர்ந்த இடத்தை அர்த்தப்படுத்தவும், "பாதாளம்" என்ற வார்த்தையை ஒருவர் செல்லக்கூடிய மிகவும் தாழ்ந்த இடத்தைக் குறிப்பிடவும் பயன்படுத்தினார்.

"பாதாளம்" என்ற பவுலின் பதிலி வார்த்தையைத் தவிர, அவர் உபாகமம் 30:11-14ன் பாகங்களினுடைய சொல்லாக்கத்தை நகலெடுக்க நெருங்கி வந்தார். இருப்பினும், அவர் பின்வரும் விளக்கங்களைக் கூடுதலாகக் கூறியதன்மூலம் தமது சொந்த நோக்கத்திற்கென்று வார்த்தை அமைவைத் தழுவியமைத்தார்: "கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி" மற்றும் "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி." பழைய ஏற்பாட்டுச் சொற்றொடராக்கம் மற்றும் பவுலின் விளக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டு அவர் தர நோக்கமாயிருந்த செய்தி என்ன? இதற்கான திறவுகோல், உபாகமம் 30:11-14ன் அறிமுக வார்த்தைகளில் அனேகமாகக் கண்டறியப்படலாம்: "நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை [1] உனக்கு மறைபொருளும் அல்ல, [2] அது உனக்குத் தூரமானதும் அல்ல" (வசனம் 11).

ரோமர் 10:6-8அ வசனப்பகுதியில், சுவிசேஷத்தின் வேண்டுகோள்கள் மிகவும் கடினமானவைகள் அல்ல என்பதே பவுலின் செய்தியாக உள்ளது. லியோன்

மோரீஸ் என்பவரின் கூற்றுப்படி, பவுல் "சாத்தியமற்ற விஷயம் பற்றிப் பழமொழி யாகியிருந்த சொல்விளக்கங்களைப் பயன்படுத்தினார்."[21] தேவன் கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்திற்கு ஏறுதல் அல்லது கிறிஸ்துவை ஏறி வரப்பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குதல் என்பது போன்ற சக்திமானுக் குரிய பணிப்பொறுப்புகளைச் செய்யும்படி நமக்குக் கட்டளையிடுவதில்லை. நாம் விசுவாசிக்கும்படியும் நமது விசுவாசத்தை வெளிக்காண்பிக்கும்படியும் மாத்திரமே கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறோம் (மாற்கு 16:16).

பவுலின் செய்தியினுடைய இரண்டாம் பாகம் முதல் பாகத்துடன் உறவுபட்டுள்ளது: நீதியைப் பெறுதல் என்பது எவரொருவரின் அடைவு எல்லைக்கும் புறம்பே இருப்பதில்லை - ஏனென்றால் எல்லாருமே, கர்த்தர்மீதும் அவரது வழியின்மீதும் நம்பிக்கை வைக்க முடிபவர்களாகவே இருக்கிறோம்.[22] பவுல் யூதர்களுக்கு, "வார்த்தை அருகில் இருக்கிறது" என்று உறுதிப்படுத்த முடிந்தது, ஏனென்றால் அவர் ஒரு புதிய இடத்திற்குச் சென்றபோதெல்லாம், சுவிசேஷத்தைக் கேள்விப்பட யூதர்களுக்கே அவர் முதல் வாய்ப்பளித்தார் (நடபடிகள் 13:14; 14:1; 17:1; 18:19; காண்க ரோமர் 1:16).

அதுவே ரோமர் 10:6-8அ வசனப்பகுதியின் அடிப்படைச் செய்தியாக உள்ளது; ஆனால் நடைமுறை பயன்பாடு பற்றிய பவுலின் வார்த்தைகளை நான் வாசிக்கையில், இவ்விரு குறிப்பிட்ட சாத்தியக்கூறற்ற பணிப்பொறுப்புகள் யூதத்துவ அவிசுவாசத்தைப் பிரதிபலித்ததால் அவற்றைப் பவுல் தேர்ந்தெடுத் தாரோ என்று நான் வியப்படைகிறேன். யூதர்கள் இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாதபடியால், மேசியா பரலோகத்தில் இருந்து "கீழே கொண்டு வரப்பட்டு" இருந்தார் (அதாவது, அவர் உண்மையிலேயே வந்திருந் தார்) என்பதை அவர்கள் நம்பவில்லை. மற்றும், அவர்கள் இயேசு மரித்தோரி லிருந்து உயிர்ப்பிக்கப்பட்டிருந்தார் என்பதை நம்பவில்லை. 6 மற்றும் 7ம் வசனங்கள், மேசியாவைக் கீழே கொண்டுவருவதற்கு எவரொரு வரும் பரலோகத்திற்கு ஏறிச்செல்லுதல் தேவையற்றதாக இருந்தது, ஏனெனில் அவர் ஏற்கனவே வந்திருந்தார் என்பதைப் பவுலின் உறுதிப்பாடாகக் கண்ணோக்கப்பட முடியும். அதுபோலவே, கிறிஸ்துவை மரித்தோரி லிருந்து மேலே கொண்டுவருவதற்கு எவரொருவரும் பாதாளத் திற்கு இறங்குதலும் தேவையற்றதாக இருந்தது, ஏனெனில் அவர் ஏற்கனவே உயிர்ப்பிக்கப்பட்டிருந்தார்.

உபாகமம் 30:11-14 வசனப்பகுதி பின்வரும் குறிப்புடன் முடிவடைகிறது: "*நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு*, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது" (வசனம் 14; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "தேவனுடைய சித்தம் ... இஸ்ரவேல் மக்களுக்கு எளிமையாக வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதை மோசே தெளிவாக்கியிருந்தார் ([உபாகமம்] 29:29). எனவே, இஸ்ரவேலின் *வாயாகவும்* புரிந்துகொள்ளுதலாகவும் (*இருதயமாகவும்*) இருந்தநிலையில், செயல்படக்கூடிய சிலவிஷயங்கள் இருந்தன: *நீ அதைச் செய்ய முடியும்*."[23] பவுல் நியாயப்பிர மாணம் பற்றிய மோசேயின் வார்த்தைகளை எடுத்து அவற்றை சுவிசேஷத் திற்கு நடைமுறைப்படுத்தினார். சுவிசேஷம் யூதர்களின் இருதயங்களிலும் வாய்களிலும் *இருந்தது* என்று பவுல் கூறவில்லை, ஆனால் அது அவ்வாறு *இருக்க முடியும்* மற்றும் *இருக்க வேண்டும்* என்றே அவர் கூறினார். அவர்

சுவிசேஷம் அடையக்கூடிய வழியில் இருப்பதையும் அது கிடைக்கக்கூடியதாக இருப்பதையும் வலியுறுத்தினார்.

## யூதர்கள் மேற்கொள்ள வேண்டிய பாதை (10:8-13)

**இரட்சிக்கும் செய்தி (வசனங்கள் 8-10)**

பவுல், மோசேயின் வார்த்தைகளை, சுவிசேஷம் பற்றிய ஒரு சுருக்க மான கலந்துரையாடலுக்கு வழிநடத்தும்படி பயன்படுத்தினார். "ஆனால் அது [விசுவாசத்தின் அடிப்படையிலான நீதி] கூறுவது என்ன? 'இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது' என்றும் சொல்லுகிறது - இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே" (ரோமர் 10:8). "விசுவாசத்தின் வார்த்தை" என்பது விசுவாசத்தை உண்டாக்குகிற வார்த்தையாகவும் (ரோமர் 10:17) "விசுவாசத்தின் பதில்செயலை வேண்டிக்கேட்கிற செய்தியாகவும், *அதாவது* சுவிசேஷமாகவும் உள்ளது" (காண்க ரோமர் 1:16).[24]

இந்த "விசுவாச வார்த்தையின்" பொருளடக்கமாக இருந்தது என்ன? நாம் தேவனுடைய கிருபை மற்றும் இயேசுவின் மரணம் ஆகியவற்றைப் பற்றி வாசித்தலை எதிர்பார்க்கலாம். அதற்குப்பதிலாகப், பவுல் உபாகமம் 10:14ன் வார்த்தையமைப்பிலிருந்து தமது குறிப்பை எடுத்து, தேவனுடைய அன்பின் வரலாற்றிற்கு மனிதரின் பதில்செயல் பற்றிப் பேசினார்: "என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே[25] விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9). 10:1ல் பவுல் இஸ்ரவேல் மக்களின் இரட்சிப்புக்காகத் தாம் ஜெபித்துக்கொண்டிருந்ததாகக் கூறியிருந்தார். இப்போது அவர், அவர்கள் *எவ்வாறு* இரட்சிக்கப்படக்கூடும் என்று கூறினார்: வாயினாலே அறிக்கையிட்டு, இருதயத்திலே விசுவாசித்தல் - இருதயத்தில் விசுவாசித்து, அதைத் தொடர்ந்து வாயினால் அறிக்கையிடுதல் என்பதே வரிசைமுறையாக உள்ளது, ஆனால் பவுல் உபாகமம் 30:14ல் மோசே பயன்படுத்தியிருந்த முறையைப் பிரதிபலித்தார். அவ்வசனப்பகுதியில், "உன் வாயிலும்" என்பது "உன் இருதயத்திலும்" என்பதற்கு முன்னால் வந்தது. நமது வேதபாட வசனப்பகுதியின் 10ம் வசனத்தில் பவுல் இந்த வரிசை முறைமையைத் திருப்பி இட்டார்.

ரோமர் 10:9ம் வசனமானது, சுவிசேஷத்தின் இன்றியமையாத மற்றும் இடம்மாற்றப்பட இயலாத இரு கூறுகளைத் தொடுகிறது: தேவன், இயேசுவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தார் என்ற உண்மை (காண்க 1 கொரிந்தியர் 15:17) மற்றும் இயேசுவே கர்த்தராக இருக்கிறார் என்ற உண்மை (காண்க கொலோசெயர் 2:6). இவ்விடத்தில் "கர்த்தர்" (*kurios*) என்ற வார்த்தை தெய்வீகத்தின் குறிப்புப் பொருளுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. செப்துவஜிந்த் வேதாகமம் *kurios* என்ற வார்த்தையைத் தேவனுடைய பரிசுத்த நாமத்தைக் குறிப்பதற்காக ஆறாயிரம் முறைகளுக்குமேல் பயன்படுத்தியது.[26] முதல் சுவிசேஷப் பிரசங்கத்தில் பேதுரு இந்த இரு மையச்சிந்தனைகளையும் உள்ளடக்கினார். அவர், "தேவன் அவருடைய [இயேசுவினுடைய] மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, *அவரை*

[இயேசுவை] *எழுப்பினார்.* அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடா திருந்தது" (நடபடிகள் 2:24; என்னால் வலியுறுத்தப்படுகிறது). பின்பு அவர் தமது பிரசங்கத்தின் முடிவை நெருங்குகையில், அவர் பின்வரும் முடிவை அடைந்தார்: "ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் *ஆண்டவரும்* கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்" (வசனம் 36; என்னால் வலியுறுத்தப்படுகிறது).

இந்த சத்தியங்களை விசுவாசித்தல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் ரோமர் 10:10ல் மறுபடியும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, இவ்வசனம் இந்த இரு விஷயங்களையும் இயல்பான (வரிசை) முறையில் இடுகிறது: "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்." "நீதி" (தேவனுடன் சரியாக நிற்குதல்) மற்றும் "இரட்சிப்பு" ஆகிய சொற்கள் இந்த வசனத்தில் ஒன்றுக்குப்பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. விசுவாசம் மற்றும் அறிக்கை யிடுதல் ஆகிய இரண்டுமே ஒரே நோக்கத்திற்கானவைகளாகும்: இரட்சிக்கப் படுவதற்கு, நீதிமானாக்கப்படுவதற்கு.

9 மற்றும் 10 ஆகிய வசனங்கள் வேதாகம மாணவருக்கு விசேஷித்த ஆர்வத்திற் குரியவைகளாகும், ஏனென்றால் அவைகள் நமது இருதயங்களிலுள்ள விசுவா சத்தை அறிக்கையிடுதலின் முக்கியத்துவத்திற்குத் திறவுகோல் குறிப்புகளாக உள்ளன. இயேசு, "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" என்று கூறினார் (மத்தேயு 10:32). யோவான், "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்" என்று எழுதினார் (1 யோவான் 4:15; காண்க வசனம் 2). KJV வேதாகமத்தில், எத்தி யோப்பிய மந்திரியின் மனமாற்றம் பற்றிய விவரத்தில், அந்த மந்திரிக்கும் சுவிசேஷ ஊழியருக்கும் மத்தியில் பின்வரும் உரையாடல் நிகழ்ந்ததை நாம் காண்கிறோம்:

> இவ்விதமாய் அவர்கள் வழிநடந்துபோகையில், தண்ணீருள்ள ஓரிடத் திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை யென்றான். அப்பொழுது அவன்: இயேசுகிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான் (நடபடிகள் 8:36-38).

37ம் வசனம் மூலவசனத்தின் பாகமாக இருக்கவில்லை என்று பெரும்பாலான வல்லுநர்கள் ஒப்புக்கொள்கின்றனர். அதே வேளையில், இவ்வசனம் தொடக்க கால சபையில் மக்கள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னர் இயேசுவில் தாங்கள் கொண்டிருந்த விசுவாசத்தை அறிக்கையிடும் வகையின் நடைமுறையைப் பிரதி பலிக்கிறது என்று கல்வியாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

ரோமர் 10:9, 10ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையிடுதல், ஞானஸ்நானத்

திற்கு முன்பு ஏற்படுத்தப்படும் அறிக்கையிடுதலை உள்ளடக்கியிருக்கிறது என்பது நிச்சயம்,[27] ஆனால் அது அத்துடன் மட்டுப்படுத்தப்பட்டிருப்ப தில்லை. 10ம் வசனத்தில் நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது தொடர்ந்து நடைபெறும் செயலைச் சுட்டிக்காண்பிக்கிறது. CJB வேதாகமத்தில், "goes on trusting and ... keeps on making public acknowledgment" என்றுள்ளது. வேதாகமம் இரகசியமான சீஷத்துவத்தைப் பரிந்துரைப்பதில்லை. தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை, மரணத்தை எதிர்கொண்ட நிலையிலும்கூடத் தைரியமாக அறிவித்தனர்.

இயேசுவில் நாம் விசுவாசம் கொள்ளுதல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. நாம் போதிய அளவுக்குப் பலமாக விசுவாசிக்கிறோம் என்பதை மற்ற வர்கள் அறிய அனுமதித்தல் என்பதும் மிகவும் முக்கியமானதாக உள்ளது. விசுவாசமும் அறிக்கையிடுதலும் இரட்சிக்கப்படுவதற்கு அத்தியாவசிய மானவைகளாக உள்ளன.அறிக்கையிடுதல் இல்லாத விசுவாசம் கோழைத்தன மாக இருக்கையில், விசுவாசம் இல்லாத அறிக்கையிடுதல் மாய்மாலமாக உள்ளது.[28]

"விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு" என்ற கருத்தின் பரிந்துரையாளர்களில் சிலர், இரட்சிப்புக்கு அறிக்கையிடுதல் தேவை என்ற பவுலின் போதனையைக் குறித்து சங்கடம் அடைகின்றனர். "விசுவாசம் மட்டும்" என்பதற்கு "விசுவாசம் அத்துடன் கூடுதலாக ஒன்றுமில்லை, குறைவாக ஒன்றுமில்லை" என்பது அடிக்கடி பயன்படுத்தப்படும் விளக்கமாக உள்ளது. இருப்பினும், ரோமர் 10:9, 10 விசுவாசத்துடன் கூடுதலாக அறிக்கையிடுதல் என்பதைக் கொண்டுள்ளது. ஒரு சில மொழிபெயர்ப்பாளர்கள் அறிக்கையிடுதலை விசுவாசத்தைக் காட்டிலும் மாறுபட்ட வகைப்பாட்டில் இட முயற்சி செய்துள்ளனர். அவர்கள், 10ம் வசனம் பின்வருவது போன்றுள்ளதாக விளக்கப்படுத்துகின்றனர்: "ஒரு மனிதர் இருதயத்தில் விசுவாசிக்கிறார், இது அவர் நீதிமானாக்கப்படுதலை விளைவிக்கிறது, மற்றும் அவர் வாயினால் அறிக்கைபண்ணுகிறார், அது அவரது இரட்சிப்பை _உறுதிப்படுத்துகிறது_." இருப்பினும், கிரேக்க வசனத்தில், விசுவாசம் மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பாக அதே வார்த்தை அமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. "உண்டாக" என்ற சொற்றொடர், "உள்ளாக" என்ற அடிப்படை அர்த்தம் கொண்ட *eis* என்ற கிரேக்க முன்னிடைச்சொல்லின் மொழிபெயர்ப்பாக உள்ளது.[29] விசுவாசம் ஒருவரை நீதி/இரட்சிப்பு என்ப வற்றிற்கு "உள்ளாக" இடுகிறது, மற்றும் அறிக்கையிடுதல் ஒருவரை இரட்சிப்பு/நீதி என்பவற்றிற்கு "உள்ளாக" இடுகிறது. விசுவாசமும் அறிக்கையிடுதலும் ஆகிய இரண்டுமே இரட்சிப்பு/நீதிமானாக்கப்படுதல் என்பவற்றிற்கு அத்தியாவசி யானவைகளாக உள்ளன.

மக்கள் விசுவாசத்தால் மட்டுமே இரட்சிக்கப்படுகின்றனர், ஆகவே இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை என்று "நிரூபிக்க" ரோமர் 10:9, 10ஐ மேற்கோள் காண்பிக்கும் சிலருடன் வேதாகமத்தை நான் அவ்வப்போது படித்திருக்கிறேன். ரோமர் 10:9, 10 "விசுவாசம், அத்துடன் கூடுதலாக எதுவு மில்லை, குறைவாகவும் எதுவுமில்லை" என்று போதிப்ப*தில்லை*யாகையால், இது எப்போதுமே என்னைத் திகைக்க வைப்பதுண்டு. இது விசுவாசம் *அத்துடன் கூடுதலாக* அறிக்கையிடுதல் என்பதைப் போதிக்கிறது. இவ்விரண்டும் நெருக்க மான உறவுகொண்டுள்ளன, ஆனால் இவைகள் ஒரே பொருள் கொண்டவையல்ல.

ஒருவர் அறிக்கையிடாமலேயே விசுவாசிக்க முடியும் (காண்க யோவான் 12:42, 43), மற்றும் ஒருவர் விசுவாசிக்காமலேயே அறிக்கையிடவும் முடியும் (காண்க மத்தேயு 7:21-23; லூக்கா 6:46).

ரோமர் 10:9, 10ல் பவுல் விசுவாசம் அத்துடன் கூடுதலாக அறிக்கையிடுதல் என்பதைப் போதித்தார் என்று நான் சுட்டிக்காண்பிக்கும்போது, "ஆனால் அறிக்கையிடுதல் என்பது விசுவாசத்தின் வெளிப்பாடாகத் தானே உள்ளது" என்பது வழக்கமான பதிலாக உள்ளது. அது உண்மையாகவே உள்ளது - ஆனால், "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்" என்பதன் போதனை அறிக்கை யிடுதலின் வெளிப்பாட்டை சட்டப்பூர்வமாக உள்ளடக்க முடியும் என்றால், மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் போன்ற தேவனால் கட்டளை யிடப்பட்ட மற்ற வெளிப்பாடுகளை ஏன் உள்ளடக்க முடியாது (ரோமர் 2:4; 6:3-6)? ரோமர் 10ல் பவுல் விசுவாசம் மற்றும் அறிக்கையிடுதல் தொடர்பாகப் பயன்படுத்திய (*eis* என்ற) அதே முன்னிடைச்சொல்லை, நடபடிகள் 2ல் பேதுரு மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்தினார் என்பதைக் கவனியுங்கள். பாவிகளுக்குப் பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று [*eis*] இயேசுகிறிஸ்துவின் நாமத்தி னாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" என்று கட்டளையிட்டார் (நடபடிகள் 2:38).

**உலகளாவிய ஒரு செய்தி (வசனங்கள் 11-13)**

நமது வேதபாட வசனப்பகுதியில், தொடர்ந்து நாம் ரோமர் 10:11க்கு வருகிறோம், அங்கு பவுல், சற்று முன்பு தாம் பயன்படுத்தியிருந்த (காண்க ரோமர் 9:33) ஏற்புடைய பழைய ஏற்பாட்டு வசனப்பகுதி ஒன்றைத் திரும்பவும் மேற்கோள் காண்பித்தார்: " 'அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று' வேதம் சொல்லுகிறது [ஏசாயா 28:16]." விசுவாசத்தின் அடிப்படையில் நீதிமானாக்கப்படுதல் என்பதற்கான தமது அடிப்படை ஆய்வுக்கருத்திற்குத் திரும்பிய நிலையில் பவுல் "யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை" என்று குறிப்பிட்டார் (ரோமர் 10:12அ). 3ம் அதிகாரத்தில் அவர் யூதர்களுக்கும் புறஜாதியாருக்குமிடையில் "வித்தியாசமே இல்லை" என்று கூறியிருந்தார் (வசனம் 22); ஆனால் அங்கு அவர் இரட்சிப்பின் *அவசியம் குறித்து* வித்தியாசமே இல்லை, ஏனெனில் "எல்லாரும் [யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இருவருமே] பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி"ப் போனோம் என்று அவர் செயல் விளக்கப்படுத்தினார் (வசனம் 23). 10:12ல், பவுல் இரட்சிப்பின் *அடிப்படை குறித்து* வித்தியாசமே இல்லை என்பதை வலியுறுத்தினார்: எல்லாருமே விசுவாசத்தின் அடிப்படையில்தான் இரட்சிக்கப்படுகிறோம். F. F. புரூஸ் என்பவர் பின்வருமாறு எழுதினார்,

> ரோமருக்கு எழுதிய நிருபத்தின் விவாதத்தில் முந்திய ஒரு நிலையில் ... வித்தியாசமே இல்லை" என்ற வார்த்தைகள் கடுமையான ஒலியைக் கொண்டிருந்தன, ஏனென்றால் அவைகள் தேவனுக்கெதிரான பாவம் மற்றும் சொந்த முயற்சியால் அவரது ஏற்றுக்கொள்ளுதலை வெற்றியாகப் பெற இயலாமை ஆகியவற்றைக் குறித்து யூதர்கள் மற்றும் புறஜாதியாருக்கு

> *உணர்த்தின ..., இப்போது அதே வார்த்தைகள் மகிழ்ச்சி நிறைந்தவையாக ஒலிக்கின்றன, ஏனென்றால் [இங்கு] அவைகள், யூதர்களுக்கும் புறஜாதி யாருக்கும் ஒருசேர,தேவனுடைய இரக்கத்தின் வாசல்கள் அவர்கள் பிரவேசிப்பதற்கென்று அகலமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன, அவரது இலவசமான மன்னிப்பை விசுவாசத்தினால் கோரும் யாவருக்கும் கிறிஸ்து வுக்குள் அது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கின்றன.*[30]

பவுல் கூடுதலாக, "[யூதரோ அல்லது புறஜாதியாரோ; காண்க 3:29, 30] எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற [யூதர் அல்லது புறஜாதியார்] யாவருக்கும் [ஆவிக்குரிய] ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்" என்று எழுதினார் (10:12ஆ). உலகத்தில் மிகவும் செல்வந்தர்களாக இருக்கிற மனிதர்களைப் பற்றி நினைத்துப் பாருங்கள்.[31] அவர்கள் செல்வந்தர்களாக இருப்பது போன்றே, அவர்களுடைய செல்வத்திற்கும் ஒரு வரையறை உள்ளது - ஆனால் தேவனுடைய செல்வத்திற்கு [ஐசுவரியத்திற்கு] வரையறையே இல்லை. JB வேதாகமம், "the ... Lord ... is rich enough, however many ask his help" என்று கூறுகிறது.

"கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற" (வசனம் 13) என்பது உதவியைப் பெறுவதற்கு அவரது நாமத்தைக் கூப்பிடுதல் என்பதைக் குறிக்கிறது. இது சில "மந்திரவாத சூத்திரங்களை" மனப்பாட மாக உரத்துக்கூறுதலாக இருப்பதில்லை, ஆனால் அதற்கு மாறாக, "போதுமற்ற தன்மையின் உணர்வினாலும் கர்த்தரைச் சார்ந்திருக்க முடியும் என்று உண்மை யான உறுதிப்பாட்டிலிருந்து புறப்பட்டு வரும் தேவை மற்றும் செயல்முறை களினாலும் கர்த்தரை அழைப்பதாக உள்ளது."[32] ஜிம் மெக்கைகன் என்பவர், "கர்த்தரைத் தொழுதுகொள்ளுதல்" என்பது "தேவையில் இருப்பவரின் கதறுத லாக" உள்ளது என்று எழுதினார்.[33]

"அவரைத் தொழுதுகொள்ளுதல்" என்ற சொற்றொடர் (வசனம் 14), 13ம் வசனத்தில் பவுல் மேற்கோள் காண்பித்த யோவேல் 2:32ன் அடிப்படையில் உள்ளது: "அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவ னெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்." யோவேல் தீர்க்கதரிசனத்திலுள்ள வசனப்பகுதி "கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள்" வருவதைப் பற்றிக் கூறியது (யோவேல் 2:31), மற்றும் "கர்த்தர்" என்ற சொற்றொடர் தேவனுக்கான குறிப்பாக உள்ளது. டக்ளஸ் J. மூ என்பவர், "யோவேல் தீர்க்கதரிசனப் புத்தகத்தில் 'கர்த்தர்' என்பது தேவனுடைய உடன்படிக்கையின் பெயரான யாவேயாக உள்ளது. ஆனால் பவுல் இந்த 'கர்த்தரை' இயேசுவுக்கு அடையாளப்படுத்துகிறார் (காண்க ரோமர் 10:9, 12) ... எனவே 13ம் வசனம், தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் இயேசுவைத் தேவனுடன் அடையாளப்படுத்தினர் என்பதற்கு முக்கியமான ஆதாரமாக உள்ளது" என்று எழுதினார்.[34]

பொதுவாகக் கீழ்ப்படிதல் மற்றும் குறிப்பாக ஞானஸ்நானம் ஆகிய வற்றின் அவசியத்தை மதிப்புக்குலையச் செய்வதற்காக, ரோமர் 10:12, 13 வசனங்கள் சிலரால் பயன்படுத்தப்படுகின்றன. "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதல் மாத்திரமே ஒருவர் செய்ய வேண்டிய எல்லாமுமாக உள்ளது" என்று கூறுகிற அவர்கள், "பாவிகளின் ஜெபம்" என்று அழைக்கப்படும் ஜெபத்தைத் திரும்பத் திரும்பக் கூறுதலே ஒரு நபர் "கர்த்தருடைய நாமத்தைத்

தொழுதுகொள்ளும்" வழி என்று வலியுறுத்துகின்றனர். இருப்பினும், சந்தர்ப்பப் பொருளில், 12 மற்றும் 13ம் வசனங்களிலுள்ள, கர்த்தரைத் தொழுதுகொள்ளுதல் என்பது 10 மற்றும் 11ம் வசனங்களிலுள்ள விசுவாசித்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பதைப் போன்றதாகவே உள்ளது. மற்றும், நடபடிகள் 2:21ல் பேதுரு, யோவேல் தீர்க்கதரிசனத்திலிருந்து இதே வசனப்பகுதியை மேற்கோள் காண்பித்து, பின்பு தமது உரையைக் கேட்டவர்களிடத்தில், மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினார் (நடபடிகள் 2:38). மேலும், "கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுதலில்" ஞானஸ்நானம் உள்ளடக்கப்பட்டுள்ளதற்கு ஏவுதல் பெற்ற உதாரணத்தையும் நாம் கொண்டுள்ளோம். பிரசங்கியாரான அனனியா என்பவர் சவுலினிடத்தில், "இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறினார் (நடபடிகள் 22:16). நிறைவாக, 10ம் வசனத்திலுள்ள விசுவாசித்தல் மற்றும் அறிக்கையிடுதல் போலவே, உதவிக்குக் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுதலும், விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவர் தமது வாழ்நாள் முழுவதிலும் *தொடர்ந்து* செய்யவேண்டிய விஷயமாக உள்ளது (காண்க 1 கொரிந்தியர் 1:2; 2 தீமோத்தேயு 2:22).

ரோமர் 10:9-13ஐப் பற்றிய நேர்மாறான கருத்துக்கள், உங்களைப் பவுல் போதித்த சத்தியத்திலிருந்து பாதைமாற்றிவிட அனுமதிக்காதிருங்கள். அவர் தேவன் இரட்சிப்புக்கு இரண்டு வழிகளைக் கொண்டிருக்கவில்லை என்பதை வலியுறுத்தினார்: அதாவது, யூதர்களுக்கென்று ஒருவழியையும் புறஜாதியார்களுக்கென்று ஒருவழியையும் அவர் கொண்டிருக்கவில்லை. மாறாக, யூதர்களும் புறஜாதியாரும் ஒரேவழியில்தான் இரட்சிக்கப்படுவார்கள்: இயேசுவில் விசுவாசம் கொண்டு, தங்களின் விசுவாசத்தை அறிக்கையிடுதல் என்பதே அவ்வழியாக உள்ளது. யூதர்கள் இரட்சிக்கப்படவில்லை என்றால், அவர்கள் தங்களைத் தவிரக் குற்றம்சாட்டுவதற்கு வேறு யாரையும் கொண்டிருக்கவில்லை. அது அவர்கள் இயேசுவை மேசியா மற்றும் அவர்களின் இரட்சகர் என்று ஏற்றுக்கொள்ள மறுத்ததின் காரணமாகவே ஆவதாயிருக்கும்.

## முடிவுரை

இந்தப் பாடத்தில் நாம், "யூதர்களில் பெரும்பான்மையானவர்கள் தேவனால் புறக்கணிக்கப்பட்டதற்கு யாரைக் குற்றம் சாட்டுவது?" என்று கேட்டோம். யூதர்கள் தங்களின் இழந்துபோகப்பட்ட நிலைக்குத் தாங்களே காரணமாயிருந்தனர் என்று நாம் முடிவுசெய்தோம். ஒரு பிள்ளை, ரொட்டியை வைத்துக் கொண்டிருந்த இன்னொரு பிள்ளையைச் சுட்டிக்காட்டி, "அவன் ரொட்டி வைத்திருக்கிறான், என்னிடம் ரொட்டி இல்லை!" என்று முறையிட்ட நிகழ்ச்சி என்ற உருவகம்தான் என் மனதிற்கு வருகிறது. அந்த வேளையாவற்றிலும் அந்த முதல் பிள்ளையின் பெற்றோர் ஒரு ரொட்டியைக் கையில் வைத்துக்கொண்டு, அவனிடத்தில், "ஆனால் உனக்குரியது இங்கே இருக்கிறது! நீ வந்து அதை எடுத்துக்கொள்ள வேண்டியது மாத்திரமே நீ செய்ய வேண்டியதாக உள்ளது!" என்று அவனிடத்தில் கூறிக்கொண்டிருந்தனர்.

நாம் யூதர்களைக் கண்ணோக்கி, "அவர்கள் ஏன் இயேசுவை ஏற்றுக்கொண்டு

*இரட்சிக்கப்பட்டவர்களாகவில்லை?" என்று வியப்படையலாம். இயேசுவைப் புறக்கணித்துவிட்டு, பின்பு தேவன் அவர்களைப் புறக்கணித்தபடியால் முறையிட்டதில் அவர்கள் மதியீனமாயிருந்தனர் என்றுகூட நாம் கருதலாம். யூதர்களை விமர்சனம் செய்வதில் நம்மையே நாம் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கச் சாத்தியமுண்டா? நாம் இயேசுவை மேசியாவாகவும் நமது இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டிருக்கிறோமா? அவர் மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டார் என்று நாம் விசுவாசித்து, அவரைக் கர்த்தர் என்று அறிக்கையிட்டிருக்கிறோமா? அவருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றதினால் அவரை நாம் தொழுதுகொண்டிருக்கிறோமா? கிறிஸ்தவ வாழ்வில் அவருடன் நாம் நடக்கையில், நாம் தொடர்ந்து அவரைத் தொழுதுகொண்டிருக்கிறோமா? கிறிஸ்தவ வாழ்வில் அவருடன் நாம் நடக்கையில், நாம் தொடர்ந்து அவரைத் தொழுதுகொண்டிருக்கிறோமா? கர்த்தருடனான நமது உறவில் ஏதேனும் குறைவுபடுகிறதா? அப்படியிருந்தால், நாம் நமது தேவைகளை ஒப்புக்கொண்டு கர்த்தரையும் அவரது வழியையும் ஏற்றுக்கொள்ளத் துரிதப்படுவோமாக. நான் கடினமாயிருக்க விரும்பவில்லை, ஆனால் நான் தெளிவாயிருக்க விரும்புகிறேன்: நீங்கள் இழந்துபோகப்பட்டால், உங்களைத் தவிர வேறு யாரையும் குற்றம் சாட்ட உங்களால் இயலாது!*

---

குறிப்புகள்

[1]Ambrose Bierce, quoted in Leonard Louis Levinson, *Webster's Unafraid Dictionary* (New York: Collier Books, 1967), 206. [2]*குற்றச்சாட்டைப் பிறர்மீது சுமத்த விரும்பும் மக்கள் பற்றிய உங்கள் சொந்தக் கதைகளை நீங்கள் கொண்டிருப்பீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஒருமுறை நான் கோப உணர்வைக் கட்டுப்படுத்த இயலாதவராக இருந்த ஒருவருடைய மனைவிக்கு ஆற்றுப்படுத்தி ஆலோசனை வழங்கினேன். கணவர் தமது கைமுஷ்டியால் ஜன்னலை அடித்து, கண்ணாடியை நொறுக்கி தன்னைத்தானே கடுமையாக வெட்டிக் கொண்டிருந்தார். அதைச் செய்தநிலையில் அவர் தனது இரத்தம் வழியும் கையை உயர்த்தி, தனது மனைவியிடத்தில், "நான் எதைச் செய்யும்படி நீ என்னை ஆக்கிவிட்டாய் பார்!" என்று கூறினார்.* [3]Quoted in Craig Brian Larson, ed., *Illustrations for Preaching and Teaching* (Grand Rapids, Mich.: Baker Books, 1993), 234. [4]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 374, n. 135. [5]*எழுத்தாளர்கள் பின்வருவது போன்ற கேள்விகளைக் கொண்டு தங்களைத் தாங்களே கவலைப்படுத்திக்கொள்கின்றனர்: பவுல், "நீதியை உண்டாக்கும் பிரமாணத்தை," "நீதியை வாக்குத்தத்தம் செய்யும் பிரமாணத்தை," அல்லது "(கிரியைகளினால்) நீதியைப் பெற உதவும் ஒரு பிரமாணத்தை (கொள்கையை)" இவற்றில் எதை அர்த்தப்படுத்தினார்? சிலர், யூதர்களை நீதிக்கு (கிறிஸ்துவினிடத்தில்) வழிநடத்த வடிவமைக்கப்பட்ட மோசேயின் பிரமாணத்தைப் பவுல் குறிப்பிட்டார் என்று நினைக்கின்றனர் (காண்க கலாத்தியர் 3:24).* [6]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 606. [7]*பழைய ஏற்பாட்டு வசனப்பகுதியானது, யூதர்கள் தேவனைத் தங்கள் புகலிடம் என்ற வகையில் புறக்கணித்தனர் என்று குறிப்பிட்டது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இவ்வசனப்பகுதியை இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தினர்.* [8]Vine, 441. [9]C. F. Hogg and W. E. Vine, *The Epistle to the Galatians* (Grand Rapids, Mich.: Kregel Publications, 1921), 262. My copy of the NASB has this note: "Lit[erally] put to shame." [10] Ibid., 681.

[11]Quoted in Morris, 378. [12]*The Analytical Greek Lexicon* (London: Samuel Bagster &

Sons, 1971), 181. [13]Vine, 348. [14]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 280. [15]*இதை நீங்கள், உங்கள் பகுதியில் மேலோங்கியிருக்கும், மனிதரால் கண்டுபிடிக்கப் பட்ட "பரலோகத்திற்குச் செல்லும்" வழிகளில் சிலவற்றை உள்ளடக்கி விரிவாக்கக் கூடும்.* [16]*இவ்வார்த்தைகள் ஃபிராங்க் சினாட்ரா என்பவரால் பிரபலமாக்கப்பட்ட* (Paul Anka, "My Way" [1968] *என்ற) பாடலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன.* [17]F. F. Bruce, *The Letter of Paul to the Romans,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 190. [18]*ரோமருக்கு எழுதிய நிருபம், 2* என்ற புத்தகத்தில் *காணப்படும் "கிறிஸ்தவரும் நியாயப்பிரமாணமும் (7:1-14)" என்ற பாடத்தில் 7:1-6ன் மீதான விளக்கங்களைக் காணவும்.* [19]*ரோமருக்கு எழுதிய நிருபம், 1* என்ற புத்தகத்தி லுள்ள *"விஷயத்தின் இருதயம் போன்ற மையப்பகுதி (1:16, 17)" என்ற பாடத்தில் "விசுவாசத்தினால் பிழைப்பான்" என்ற சொற்றொடரின் மீதான விளக்கங்களைக் காணவும்.* [20]Vine, 75.

[21]Morris, 383. [22]*இதற்கு - ஏதாவது ஒரு காரணத்திற்காக, தங்கள் செயல்களுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியிராதவர்கள் [குழந்தைகள் மற்றும் சித்தம் கலங்கியவர்கள்] என்ற - விதிவிலக்குகள் உள்ளன என்பது தெளிவு, ஆனால் பவுல் விதிவிலக்கையல்ல. மாறாக, விதியையே தமது சிந்தையில் கொண்டிருந்தார்.* [23]J. A. Thompson, *Deuteronomy,* Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1974), 286. [24]Stott, 283. [25]*விஷயங்களை (மேம்போக்காக அல்ல ஆனால்) "இருதயத்திலிருந்து" செய்வதன் முக்கியத்துவம் (6:17, 18ல் உள்ளது போன்று) ரோமருக்கு எழுதிய நிருபம் முழுவதிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.* [26]C. E. B. Cranfield, *Romans: A Shorter Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 258. [27]*பல விளக்கவுரையாளர்கள், ரோமர் 10:9, 10ன் மீது விளக்கம் அளிக்கையில் ஞானஸ்நானத்திற்கு முன் அறிக்கையிடுதல் பற்றிக் குறிப்பிடுகின்றனர்.* [28]Adapted from R. C. Bell, *Studies in Romans* ·(Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 122. [29]D. F. Hudson, *Teach Yourself New Testament Greek* (London: English Universities Press, 1960), 106. [30]Bruce, 193.

[31]*உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமான, செல்வந்தமிக்க தனிநபர்கள் சிலரை இங்கு பெயர் குறிப்பிடுங்கள். இந்தப் பாடத்தை நீங்கள் ஒரு வகுப்பறை அமைவில் பயன்படுத்தினால், வகுப்பில் உள்ளவர்களிடத்தில் அப்படிப்பட்டவர்களின் பெயர்களைக் கூறும்படி நீங்கள் கேட்கலாம்.* [32]Morris, 388. [33]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 311. [34]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 333. [35]A supplementary section entitled "Christ the Living Stone" is included in James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 352-57.